செ.வெ.எண்: 55/2017 நாள்: 23.01.2017

# பத்திரிகை செய்தி

**கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குடியரசு தினமான 26.01.2017 அன்று கிராமசபைக் கூட்டம் - மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்.**

--------------

இந்திய நாட்டின் **குடியரசு தினமான 26.01.2017** அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சிகளின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையில் காலை 11.00 மணி அளவில் நடத்திடவும், குறைவெண்வரம்பின் படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டங்களை நடத்திடவும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 95 கிராம ஊராட்சிகளிலும் **26.01.2017** வியாழக் கிழமை அன்று காலை 11.00 மணியளவில் கிராமசபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சியின் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக அடுத்து வரும் நிதி ஆண்டிற்கான திட்ட அறிவிக்கையினை கிராமசபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல் மற்றும் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

மேலும், அரசால் பல்வேறு துறைகளின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்கவும், பொது மக்களுக்குத் தேவையான விவரங்களை அளித்திடவும் அனைத்துத் துறைகளின் அலுவலர்களும் இக்கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

எனவே, அந்தந்த கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் களநிலை அலுவலர்கள் பங்கேற்று சிறப்பாக நடத்தவுள்ள இக்கிராமசபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.